RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/ irjt22422

# திராவிட இயக்கமும் அரங்கண்ணலும்

இர. சுரேஷ் [அ, *], வா.மு.சே. முத்துராமலிங்க ஆண்டவர் [அ]

[அ] தமிழ்த்துறை, பச்சையப்பன் கல்லூரி, (சென்னை பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றது), சென்னை-600030, தமிழ்நாடு இந்தியா.

# Dravidian Movement and Arangannal

**R. Suresh [a, *], Va.Mu.Se. Muthuramalinga Andavar [a]**

[a] Department of Tamil, Pachaiyappa's College, (Affiliated to University of Madras), Chennai-600030, Tamil Nadu, India

* Corresponding Author: mathirangankavi@gmail.com

Received: 30-05-2022
Revised: 23-09-2022
Accepted: 02-10-2022
Published: 14-10-2022

**ABSTRACT**

Human society was degraded by superstitious practices without intellectual awareness. The society of the day was subjected to decline and suffering. The social reformers who emerged among the communities guided the people. Among them, Jesus, Prophet, Buddha, Gandhi, and others are notable. From time-to-time reformers appeared to reform society on the soil. Because of the illiteracy of the people, inequality and atrocities in society took place every day. Communalism and caste oppression swelled, and women and the downtrodden suffered from irrational acts. There are plenty of intellectual organizations on the soil that have arisen to reform human society to recover from them. The purpose of this article is to study the Dravidian movement that reformed the people against the atrocities of caste, religion, labour exploitation, and bonded labour in southern Tamil Nadu, and the creator Arangannal, who assimilated and spoke and wrote Dravidian ideology.

**Keywords:** Arangannal, Dravidian ideology, Communities, Awareness

## முன்னுரை

காலந்தொட்டோ, காரணத்தை ஒட்டியோ, சமூகத்தைக் கட்டமைப்பதற்காகவோ கட்டமைந்த சமூகத்தைச் செம்மை செய்து வழிநடத்தவோ சில இயக்கங்களும், அமைப்புகளும் தோன்றலாயின. அவ்வாறு தோன்றிய சீர்திருத்த இயக்கங்களில் ஒன்று திராவிட இயக்கமாகும். இவ்வியக்கத்தில் மக்களுக்கு சேவைபுரிய தன்முனைப்போடு வந்த தலைவர்கள் எண்ணற்றோர் அவர்களில் ஒருவரான அரங்கண்ணலின் படைப்புகள் கூறும் சமூக சிந்தனைகள் பற்றி திராவிட இயக்கமும் எனும் தலைப்பில் ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## திராவிட இயக்கத் தோற்றமும் வளர்ச்சியும்

நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம் போன்றவற்றின் வழித்தோன்றலாக திராவிட இயக்கம் வளர்ந்தது, இவ்வியக்கம் நிலைபெற பலர் உழைத்தனர். இவ்வியக்கம் மக்களின் இயக்கமாகவும், சமூக இயக்கமாக அறியப்பட பல்வேறு சீர்திருத்த கருத்துக்கள் முன்வைத்து நிறுவப்பட்டதாகும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் உருவான அரசியல் இயக்கம் ஆகும். அப்போது நிலவிய சாதிய பாகுபாடு, தீண்டாமை, மத ஏற்றத்தாழ்வு, ஆரிய ஆதிக்கம், உரிமை மறுப்பு போன்ற சமூகப் பிரச்சனைகளை முன்னெடுத்தே இவ்வியக்கம் தொடங்கப்பட்டது.

## திராவிட இயக்க முன்னோடிகள்

சமூக ஒடுக்கு முறைகளை எதிர்த்துப் போராடியவர்களில் முதன்மையானவர்கள் வைகுண்டர், அயோத்திதாச பண்டிதர், இரட்டைமலை சீனிவாசர் போன்றோரும் நினைக்கத் தக்கவர்கள். இதன் தொடர்ச்சியாக பின் தோன்றிய நீதிக்கட்சியும் இதனை வலியுறுத்தி உருவாக்கப்பட்டது. தொடக்க நிர்வாகிகளாக இருந்த டி.எம்.நாயர், தியாகராயர் செட்டியார், நடேச முதலியர் போன்றோர்களும் பெரும் சமூகப் பணியாற்றியுள்ளனர்.

நீதிக்கட்சியின் சாதனைகளைப் போன்றே திராவிட கட்சிகளும் இம்மண்ணில் பல்வேறு சாதனைகளையும், மாறுதல்களையும் ஏற்படுத்தின. அன்றைய சமூகநலனில் அக்கறை கொண்ட இயக்கமாக அது விளங்கிற்று. அடித்தட்டு மக்களின் வாழ்வியல் சார்ந்த பிரச்சனைகளை நீக்க முன்னின்று போராடின.

மூடநம்பிக்கை, சாதியியல் முரண், இந்தி திணிப்பு வர்க்கப் பாகுபாடு, சமூகத்தில் பிரிவினைப் போன்ற பிரச்சனைகளை எதிர்த்து அன்றைய காங்கிரசு அரசை கண்டித்து போராடி சிறைப்பட்டு அடக்குமுறைக்கு ஆளானார்கள். இவ்வியக்கம் இன்று வரை அதிகாரத்தில் நிலைபெற உழைத்த எண்ணற்ற தொண்டர்களும் தலைவர்களும் போற்றத்தக்கவர்கள். உறுதியான கொள்கைகளையும் கோட்பாடுகளையும் கொண்ட இவ்வியக்கம் பேனா முனையாளும், நாவின் துணையாளும் இந்த நீட்சியைப் பெற்றது எனலாம். வேர் தேடிப்போனால் இதன் முன்னோடிகள் மிகுந்த போர்க்குணம் கொண்டவர்களாகவும், சீர்திருத்தவாதிகளாகவும், சமூகத்தில் மதிப்பு மிக்கவர்களாகவும் விளங்கினர். நடேச முதலியார், தரவாத் மாதவன் நாயர், பிடி தியாகராய செட்டியார், பனகல் அரசர், இராமராய நாயக்கர், சுப்பிராயிலு ரெட்டியார், கே.வெங்கட்ரெட்டி, நாயுடு பி.டி.ராஜன், ஏ.ராமசாமி முதலியாரும் இதில் அடங்குவர் (Thirunavukkarasu, 2017).

நீதிக்கட்சியின் தலைவராக விளங்கிய தியாகராயர் சென்னை நகராட்சிப் பள்ளிகளில் மதிய உணவுத் திட்டத்தைச் செயல்படுத்தினர். இந்தியாவிலேயே முதன் முதலாக இத்திட்டத்தைச் செயல்படுத்தி வரும் இவரே. அக்காலக்கட்டத்தில் பெண்களுக்கான முன்னுரிமை அளிக்கப்பட்டது. இந்தியாவில் முதன் முதலாக சட்டசபைத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்மணி டாக்டர். முத்துலெட்சுமி ரெட்டியாவார். இவர் சென்னை மருத்துவக் கல்லூரியில் படித்து டாக்டர் பட்டம் பெற்ற இந்தியாவின் முதல் பெண்மணியாவார்.

## திராவிடக் கலைப்பணி

திராவிட இயக்கம் தொடக்க காலத்தைத் தொட்டே பெரும்பாலானோர், எழுத்தாளர்களாவும், கவிஞர்களாகவும் இருந்தார்கள். அவர்களை கணக்கில் கொண்டால் பல நூறுகளைத் தாண்டி நிற்கும். இவ்வியகத்தையும், இதன் கருத்தாக்கத்தையும் மக்களிடம் கொண்டுச் சேர்க்க பல்வேறு உத்திகளைக் கையாண்டனர். மேடை நாடகங்கள், கடிதங்கள், கட்டுரைகள், கவிதைகள் இவற்றின் மூலமாக எளிதாகின. பெரியார், அண்ணாதுரை, தில்லை மறை முதல்வன், தில்லை வெள்ளாளன், அரங்கண்ணல், பி. கே. சீனிவாசன், கருணாநிதி, சிற்றரசு, ஆசைத்தம்பி பட்டுக்கோட்டை அழகிரி, கே.ஜே.ராதாமணாளன் போன்றோர்கள், கவிதைகள் மூலமாக பாரதிதாசன், சுரதா, கண்ணதாசன், முடியரசன், வாணிதாசன், பொன்னிவளவன் போன்றோர் குறிப்பாக புலவர் குழந்தை எழுதிய இராவண காவியம் திராவிட இயக்க உணர்ச்சி வெளிப்படுத்திய நூலாகும். நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் சமுதாய வளர்சிக்கும் மொழி வளர்ச்சிக்கும் அரணாக இருப்பது திராவிட இயக்கமும் அதன் சிந்தனைவாதக் கருத்துக்களின் உறுதித் தன்மையும் ஆகும்.

## அரங்கண்ணலின் வாழ்வும் பணியும்

தஞ்சை மாவட்டம், கோமல் என்னும் ஊரில் பிறந்தவர். பள்ளி பருவத்தின் போது காங்கிரசு ஆதரவாளராக இருந்தவர். 1941-42ல் 9ஆம் வகுப்பு படிக்கும் போது கருணாநிதியுடன் நட்பு ஏற்பட்டது.

அதன் விளைவாக பலருடன் பழகும் வாய்ப்பும் உருவாகியது. பின் திராவிடத்தின்பால் ஈர்க்கப்பட்டு அதில் பயணிக்கலானார். திராவிட இயக்கதிற்குள் தாம் வருவதற்கு எவ்வாறெல்லாம் செதுக்கப்பட்டேன் என்பதைப் பற்றி தன் "நினைவுகள்" எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

"சமஸ்கிருதத்தை எதிர்த்து போரடிய காலகட்டம் அப்போது தமிழ் மீது கொண்ட பற்றின் காரணமாக தங்களுடைய பெயர்களை தூய தமிழுக்கு மாற்றியவர். சண்முகம் என்பதை மாவெண்கோ சாமிநாதன் என்ற பெயர் செம்மல் தங்கோ என்றும், இரங்கசாமி என்ற தம் பெயரை இரங்கிறை என்று மாறி பின்பு அரங்கண்ணலாக ஆனதாக குறிப்பிடுகிறார் (Ponnusamy, 2012)."

தன்னுடைய பதினெட்டாவது அகவையில் அகில இந்திய முஸ்லீம்களின் அதிகார பூர்வ ஏடான "முஸ்லீம்" எனும் இதழில் துணை ஆசிரியராக பணிபுரிந்தார். பின் "திராவிடநாடு" இதழிலும் பணியாற்றினார். அப்போது அண்ணாவிற்கு மிகவும் நெருக்கமானவராக விளங்கினார். பெரியாருடன் ஏற்பட்ட வருத்தம் காரணமாக அண்ணா திராவிட கழகத்தைப் பிரிந்த போது அண்ணாவுடன் துணை நின்றவர்.

## அரங்கங்கண்ணாலும் திரைவாழ்வும்

அரசியல் மட்டுமின்றி இலக்கியம், திரைப்படத் துறைகளிலும், இவரின் முத்திரை இருந்தது. சிறந்த எழுத்தாளராகவும், வசனகர்த்தாகவும், கதாசிரியர், தயாரிப்பாளராகவும் இவர் விளங்கினார். செந்தாமரை, மகனே கேள், பொன்விளையும் பூமி, பச்சைவிளக்கு அனுபவிராஜ அனுபவி போன்ற படங்களுக்கு வசனம் எழுதினார். "எக்தோகலியே" என்ற வெற்றி இந்த திரைப்படம் இவரின் தயாரிப்பில் உருவானது திராவிட மொழிகளில் மட்டுமின்றி இது போன்ற வடஇந்திய மொழிகளிலும் சிறந்த திரைபடங்களை தந்தவர் அரங்கண்ணல்.

இவர் இலக்கியங்கள் மொழி நடந்து நாடு கடந்து பூகோளத்தின் எப்பகுதியின் சமூக கொடுமைகளைப் பேசுவதாக அமைந்தது. அரசியல், வாரிசு முறை, வர்க்க, ஏற்றத்தாழ்வு, சாதிக்கொடுமைகள் வரதட்சணை போன்ற சமூக விரோத செயல்களைப் பற்றியும் அதனால் மனிதர்கள் படும் இன்னல்களை உணர்ச்சியோடு வெளிப்படுத்தியுள்ளார். இவர் இயற்றும் முக்கிய நூல்கள். அறுவடை, இதயகீதம், செந்தாமரை, ரஸ்பூடீன் போன்றவை. அரங்கண்ணலின் பங்கு திராவிட இயக்க வளர்ச்சிக்கும் மட்டுமின்றி இலக்கிய வளர்ச்சிக்கும் வழிகோலின.

## அரங்கண்ணலின் பார்வையில் சமூகப் பிரச்சனைகள்

ஏனைய உயிர்களிடம் இல்லாத சில பண்புகள் மனிதர்களுக்கும் உண்டென்றால் அது இவைகளாக தான் இருக்க முடியும். செல்வ ஏற்றத்தாழ்வுகள், மதபேதம், சாதிபாகுபாடு, வர்க்க முரண் போன்றவைகள். இப்படியான சிக்கல்களால் தான் மனித இனம் நிலைத்த வெற்றிகளைப் பெற முடியவில்லை இதனைக் களைய மனிதர்கள் ஒன்றிணைய வேண்டும் என்பதே தம் கதைக் கருவின் நோக்கமாக கருதுகிறார்.

## சாதி ஏற்றத்தாழ்வு

"மனிதன் மனம் எதனையாவது ஒன்றைப் எப்பொழுதுமே தேடிக் கொண்டிருக்கும் இயல்பினை உடையது (Thirunavukkarasu, 2017). பிறப்பால் வேறுபாட்டினை வேறு எந்த உயிரினமும் வளர்க்க வில்லை என்பதைக் காண்கிறோம். மாடுகளில், ஆடுகளில் பூனைகளில் இத்தயை சாதி வேறுபாடு இல்லை. சமுதாயத்தில் இந்தச் சாதி உண்டானது நாள் பொல்லாத நாளே வாடும்." என கூறுவார் (Paramasivanandham, 2019). உடைந்த ஆசை என்ற நாவலில் முதன்மையாக சொன்னதில் சாதிகொடுமை, வறுமை நிலையும் ஒன்று இதைப்போன்று ஏற்றத்தாழ்வுகளால் சமூகம் ஒன்றாகாமல் பிளவுப்பட்டு கிடப்பதை தனக்கே உரித்தான பாணியில் கேலி கிண்டலுடன் சான்றாக்குகிறார் (Arangannal, 2010).

இதில் பாத்திரமாக வரும் பெயர்கள்,

பூமாலை - ஏழைத் தொழிலாளி பரமன் மருமகள்
பரமன் - ஏழைத் தொழிலாளி
பொன்னன் - பரமனின் மகன்
பரமாத்தி ஐயர்
பரமசிவ முதலியார் - பண்ணையார்

இவர்களிடையே நடைபெறும் காட்சிகளைக் கொண்டு சமூகத்தில் ஏற்படும் நிலைமை விளக்குகிறார் (Arangannal, 2010).

“ஏய் கழுதே என்று கத்தினார் முதலியார். அவர் கூப்பாட்டில் ஆத்திரம் தொனித்தது. யாரைக் கூப்பிடுகிறார் என்று தெரியாமல் பரமனும் பொன்னனும் விழித்தனர் (Arangannal, 2010).”

“வீட்டிலிருந்து ஓடி வந்தான் கழுத என்று அழைக்கப்பட்ட சோமு என்னும் பண்ணைத்தலையார்”.

“ஏதாவது போட்டு போகச் சொல்லு, சனியன்கள்” என்றார் பண்ணை முதலியார், இரண்டுபடி நெல் வந்தது பொன்னன் தன் துணியை விரித்தான் சோமு நெல்லைக் கொட்டினான்.

இந்த நாவலில் வரும் வார்த்தைகள், ஏற்றத்தாழ்வு மனப்பான்மையும் ஆராயும் போது அப்போதைய முதலாளிகள் மேல்சாதிகாரர்களாகவும், பணபலம் பொருந்தியவராகவும் இருந்துள்ளனர் என்பதையும் அவரக்ள் தன்னிடம் வேலை செய்பவர்கள் அடிமைகள் மட்டுமின்றி மதிப்பில்லாதவராகவும் கருதினர். தொழிலாளி மட்டுமின்றி அவர்களின் குடும்பத்தினர்களையும் மதிப்பில்லாதவர்களாக கருதினர். பரமன் அவரின் மகன் பொன்னன், பொன்னின் மருமகள் பூமாலை இவர்களை ஏழைத்தொழிலாளி என்று இல்லாமல், சக மனிதர்கள் என்றும் பாராமல் கொடுமையோடு துன்புறுத்தினார் பணக்கார மேட்டுக்குடி பண்ணையார்.

இறுதியாக “பரமன் பெற்ற நூறு ரூபாய் கணக்கிட்டு உன் கணக்கை முடித்துக்கொள்” என்று ஏளனமாய் பேசி அவனை கீழ்த்தரமாய் நடத்தினார். இதனால் மனமுடைந்த பரமன் தூக்கிட்டுக் கொல்வதாகக் கதை முடிகிறது. இப்படியான போக்கால் ஒரு மனித சமூகம் எவ்வாறு நடத்துப்பட்டது என்பதை அரங்கண்ணல் இக்கதையில் விளக்குகிறார்.

## சமூகப் பிணி ஊழல்

அரசாங்கத்தையும், பொதுமக்களையும் ஏமாற்றி தம் செல்வாக்கை உயர்ந்த தவறான வழிமுறைகளை மேற்கொள்ளும் கொள்ளை (அ) மோசடியின் பெயரே ஊழல் எனலாம். அதாவது நல்ல குணங்களையும், எண்ணங்களையும் அறவே இல்லாதவர்கள் இப்படியான செயல்களைச் செய்யத் துணிவார்கள்.

பெரும் செல்வர்கள், அரசியல் அதிகாரம் பெற்றவர்கள் தாம் ஏய்த்து சம்பாதித்த பணத்தையோ, பொருளையோ காப்பாற்றிக் கொள்ள வழக்கறிஞர்கள், கணக்காளர், கவாலர் எனத்தம்மை சுற்றி ஒரு பாதுகாப்பு வளையத்தை ஏற்படுத்தி வைப்பர். இப்படியாக இவர்கள் முறைகேடுகளை முறையாக செய்வதால் நாட்டிற்கும் மக்களுக்கும் எவ்வாறான விளைவுகள் ஏற்படுகின்றன என்பதை பின் வரும் உரையாடல்களில் அரங்கண்ணல் விளக்குகிறார்.

“என் கதையைக் கேட்டீங்கன்னா, இன்னும் வேடிக்கையாக இருக்கும் மூனு வருஷமாக கணக்குக் காட்டியலியா? ஒரே சீறி பாய்ந்தாள் இன்கம்டேக்ஸ்ஸிலே! ஸ்மக்லிங்-னு கேஸிருக்கே அண்ணாச்சிக்கு தெரியுமே. நம்ப ஆளுக சரக்கைக் கொண்டு போனப்ப மாட்டிக்கிட்டது அதுவேறே ஏகப்பட்ட தொல்லை, ஜெயிலுக்குப் போகனும்னு ஆயிடுச்சு நம் வக்கில் கூட அப்படித்தான் சொன்னாரு, எனக்கு ஒன்னும் புரியலே! நிஜமா அண்ணாச்சி! ஒரு நாள் ராத்திரி சுட்டுக்கிட்டு செத்துப்பூடுவோனு கூட நினைச்சேன்.

ஆனா நல்ல வேலையா நம்ப மருமகப் பிள்ளை வந்து ஒரு யோசனை சொல்லிக்காப்பாத்திச்சு, மருமகப்பிள்ளையைத் தெரியும்லே, உங்களுக்கு இப்படியானவர்கள் முதலாளிகள் மட்டுமல்ல தலைவர்களாகவும் இருப்பதை நம்மிடையே நிலவும் பெரும் ஆபத்து இதனைக்களைய நாம்

உணர்வோடும் எச்சரிக்கையோடும் செயல்பட வேண்டும்." இந்த கருத்தைத் பாடலின் மூலம் வெளிப்படுத்தும் இவ்வாறு பாடுகின்றார்.

"தக்க வழிகாட்டும் தலைவர்களை விடவும்

தகர்க்க வழிகாட்டும் தலைவர்களே

பெறுகிறார்".

என தம் கவிதைகளால் உணர்த்துவது குறிப்பிடத்தக்கது (Muthukumar, 2011).

## பெண்களுக்கு எதிரான போக்கு

காலத்திற்கேற்ப பெண்களுக்கு எதிராhன வன்கொடுமைகளும், குற்றங்களும் நடைபெறுகின்றன. அன்றைய காலத்திலும், இன்றைய காலத்திலும் பெண்களும் அறிஞர்களாகவும், புலவர்களாகவும், மருத்துவர்களாகவும், தலைவர்களாகவும் இருந்தார்கள், இருக்கிறார்கள், இருப்பினும் பெண்களுக்கு எதிரான கொடுமைகள் குறையவில்லை.

மனதில் மாற்றம் பெறாமல் சமூகத்தில் மாற்றம் வராது, முதலில் ஒவ்வொரு மனிதரும் பெண்களின் மீதான பார்வையை உயர்வாகக் கருத வேண்டும். இவ்வாறு மாறுதல் பெறும் போது, பாலியல் வரதட்சணை, வசிசயம் செய்வது கடவுள் பெயரைச் சொல்லி ஏமாற்றுகிறப் போக்குகள் குறையும்.

ராம அரங்கண்ணல் தம் ரஸ்புடின் நாவலின் ஒரு காமகொடுரன் தாம் இறைவன் தூதுவராக கூறி அக்கிராமத்தில் இருக்கும் பெண்களை கொடுமைப்படுத்துவதும், சாட்டை எடுத்து அடிப்பதும் அவர்கள் துடிப்பதைக்கண்டு இன்புறுவதும் என தினசரி தொல்லை செய்து வாடிக்கையாக கொண்டிருப்பான்.

"இம்மையின் கொடுமை குறித்து சிறிது நேரம் பேசுவான் பேச்சு மறுமையின் பெருமைக்குத் திரும்பும்" கர்த்தர் - எல்லோரையும் மன்னித்துத் தன் பரமண்டலத்திலே அழைத்துக் கொள்வார். அவருடைய லோகம் விசாலமானது. ஆனால், அங்கு பலரும் நெருங்கி முடியாமலும் போவதுண்டு. கர்த்தர் வாழும் மேலுலகம், அங்கு செல்வதென்றால் இருக்கக்கூடிய கொடுமைகள் ஆகியவைகள் விவரிப்பான். நேரில் கண்டு வந்தவன் போல தங்களை நாடி வந்த பெண்களை வாரி அணைப்பான் என்னை நீங்கள் சேர்வது கர்த்தரைச் சேர்வதற்குச் சமம் என்று சமாதானம் செய்வான் (Arangannal, 2010)." இப்படியாக தினம் தினம் இவன் பெண்களை கொடுமைச் செய்வான். மகாபாரதத்தில் துரியோதனன் சீதையைத் துயிலுரித்தது போல இந்த பாதகன் செய்தான்.

"நாயகர் தாந்தம்மைத் தோற்றபின் என்னை
நல்குரிமை அவர்க்கில்லை - புலைத்
தாயத்திலே விலைப்பட்டபின் - என்னை
சாத்திரத்தாலெனைத் தோற்றிட்டார்?"

இப்படியான இடர்பாடுகள் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை அரங்கண்ணல் தம் நாவலின் மூலம் விளக்குகிறார் (Bharathiyar, 2011).

## முடிவுரை

சமூகத்திற்குப் பெருந்தொண்டாற்றிய நீதிக்கட்சி தோற்றத்திற்குப் பின் சமூகத்தில் மாற்றங்கள் நிகழ்ந்தன. சமூகத்தில் நிகழ்ந்த புரட்சிகள், தமிழைப் பயிற்றுமொழியாகக் கொண்டவர்களுக்குப் பணி நியமனங்களில் 20% அளிக்கும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. தமிழுக்குச் செம்மொழி அங்கீகாரம் பெறப்பட்டது. செம்மொழித் தமிழ் ஆய்வுக்காக சென்னையில் மத்திய நிறுவனம் கொண்டுவரப்பட்டது. இவை எல்லாவற்றைக் காட்டிலும் பெரும் சாதனை ஒன்றுண்டு. இந்த மண்ணின் உணர்வில் அழியா சக்தியாக திராவிடர் எனும் உணர்வை விதைத்தது. மண்ணுள்ள வரை விதைக்கப்பட்ட விதைகள் துளிர்த்துக் கொண்டே இருக்கும். பெருமரங்கள் விழுது பரப்பிப் புது மரங்கள் காடாகப் பெருகிக்

கொண்டே இருக்கும். சமூக விடுதலை யாவையும் தந்த திராவிட இயக்க வரலாறு மூலமும், அங்கே பெருந்தொண்டரான அரங்கண்ணலின் படைப்புகளில் காணப்பட்ட சமூக சிந்தனை பற்றியும் அறிய முடிகிறது.

## References

Arangannal, R., (2010) Ilakkiyam, Vasantham Pathippagam, Chennai, India.

Bharathiyar, (2011) Bharathiyar Kavithaikal, Aruna Pathippagam, Chennai, India.

Muthukumar, R., (2011) Dravida Iyakka Varalaru, Paari Nilaiyam, Chennai, India.

Paramasivanandham, A.M., (2019) Padaippukal, Tholamai Pathippagam, Chennai, India.

Ponnusamy, (2012) Boomiyai Thirakkum, Vidiyal Pathippagam, Coimbatore, India.

Thirunavukkarasu, K.D., (2017) DMK Varalaru, Nakkeren Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License